அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 09/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம் - கொழும்பு.07.
1994, பெப்ரவரி மாதம் 08 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

**நேர்முகப் பரீட்சைச் சபைகளில் அங்கத்தவர்களாகக் கடமை புரிவதற்கான கொடுப்பனவுகள்.**

1986.05.08ஆந் திகதி 328ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| (1) | நிறைவேற்று தரத்தின் பதவி/பதவிகளுக்காக ஆளொருவரை/ஆட்களைச் சேர்க்கும் பொருட்டுத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் அனைத்து அங்கத்தவர்களுக்கும். | நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் ஆளொருவருக்காக ரூபா. 15/- (பதினைந்து ரூபாய் வீதம்.) |
| (11) | நிறைவேற்று தரங்களுட்பட, தரமொன்றிலிருந்து தரமொன்றுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்காக உத்தியோகத்தரொருவரை/உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைச் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும். | நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் ஆளொருவருக்காக ரூபா. 10/- (பத்து ரூபாய் வீதம்.) |
| (111) | நிறைவேற்று தரத்தைச் சாராத தரமொன்றின் பதவியொன்றுக்கு ஆளொருவரை/ஆட்களைச் சேர்ப்பதற்காக அல்லது நிறைவேற்றுத் தரத்தைச் சாராத தரங்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்காக உத்தியோகத்தரை/உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைச் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும். | நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும் ஆளொருவருக்காக ரூபா. 5/- (ஐந்து ரூபாய் வீதம்) |
| (1V) | சிற்றூழியர்கள் தரத்தின் பதவியொன்றுக்கு ஆளொருவரை/ஆட்களைச் சேர்ப்பதற்காக அல்லது சிற்றூழியர் தரங்களுக்குரிய பதவி உயர்வு வழங்குவதற்காக உத்தியோகத்தரொருவரை/உத்தியோகத்தர்களைத் தேர்ந்தெடுக்கும் நேர்முகப் பரீட்சைச் சபையின் அனைத்து அங்கத்தவர்களுக்கும். | நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் ஆளொருவருக்காக ரூபா. 2/- (இரண்டு ரூபாய் வீதம்) |

இக் கொடுப்பனவுகள் 1993, ஜூலை மாதம் 01ஆந் திகதி தொடக்கம் நடைமுறையிலிருக்கும் என்பதுடன் இச் சுற்றறிக்கை பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: வை. பீ. புஸ்வெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.